**O.S.No.56/2019**

வா.சா.1, திருமதி.சண்முகவள்ளி
நாள் : 16.07.2025 நேரம் : 03.05 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். இந்த வழக்கில் உள்ள 1ம் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை எந்த பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தம்பியான 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்துகளில் 1/2 பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கை எத்தனை சொத்துகளை பொறுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரே சொத்து தான், ஆனால் 3 லக்கங்களாக உள்ளது. நான் காளையார்கோவில் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கு சொத்து எந்த இடத்தில் உள்ளது என்றால் முதுகுளத்தூர் வடக்கூர் பரமக்குடி மெயின் ரோட்டில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதன் சர்வே எண். 329/7 உட்பிரிவு 329/70 ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மொத்த விஸ்தீரணம் 1800 சதுர அடி, அதில் 1 வது லக்க சொத்து 1152, 2 வது லக்க சொத்து 510, 3 வது லக்க சொத்து 138 ஆகும். மேற்படி தாவா சொத்தில் 1,2,3 சொத்துகள் எந்த பக்கம் உள்ளது என்றால் சர்வே எண். 329/7 உட்பிரிவு 329/70 ல் 1 வது லக்க சொத்து ஆகையற் தெற்கு பக்கமும், 1 வது லக்கத்திற்கு ஆகையற் வடபுறம், 2,3 வது லக்க சொத்துகள் உள்ளன. 1 வது லக்க சொத்திற்கு வடபுறம் 2 வது லக்க சொத்து உள்ளது. கிழக்குபுறம் பரமக்குடி மெயின் ரோடு, தெற்கு பக்கம் சந்திரன் செட்டியார், மேற்கு பக்கம் லலிதா ஜீவல்லரி இடமும், சுப்புபிள்ளை இடமும் உள்ளது. தாவா 1 வது லக்க சொத்தில் கிழமேல் தென்வடல் அளவு தெரியாது, மொத்த விஸ்தீரணம் தான் தெரியும். 2 வது லக்க சொத்துக்கு வடக்கே மாடலடி குருசாமி, கிழக்கே பரமக்குடி மெயின் ரோடு, தெற்கே 1 வது லக்க

சொத்து, மேற்கே மாடலடி குருசாமியின் வீடு உள்ளது. தாவா 2வது மற்றும் 3வது லக்க சொத்தில் கிழமேல் தென்வடல் அளவு தெரியாது, மொத்த விஸ்தீரணம் தான் தெரியும். 3வது லக்க சொத்தில் வடக்கே மாடலடி குருசாமி வீடு, கிழக்கே பரமக்குடி மெயின் ரோடு, தெற்கே 1வது லக்க சொத்து, மேற்கே சுப்புபிள்ளை வீடு உள்ளது. தாவா சொத்துகள் தற்போது காலி இடமாக உள்ளது. தாவா வழக்கில் ஏன் 2 மற்றும் 3 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் எனது தம்பியாகிய 1ம் பிரதிவாதி எனது பாகத்தையும் சேர்த்து மேற்படி நபர்களுக்கு விற்பனை செய்துள்ளதாக தெரிந்ததால் நான் அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். நான் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் திருமணம் ஆனதிலிருந்து காளையார்கோவிலில் வசித்து வருகிறேனா என்றால் திருமணமாகி 4 வருடங்கள் தேவிப்பட்டினத்தில் இருந்தேன், அதன் பிறகு எனது பெற்றோர்கள் காலமானதற்கு பிறகு காளையார்கோவிலில் குடியிருக்கிறேன்.

விசாரணை முடிவுற்ற நேரம்: 03.25 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.07.16 14:01:16 +0530